1982 மார்ச் 5] [திரு. ஜி. கே. சுப்பிரமணியன்]

இல்லை. எனவே, இன்றைக்கு இந்த அப்பர் பவானித் திட்டத்திற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும், அல்லது குளத்துப் பாசனத் திட்டத்தைக் கொண்டு வந்து, குளங்களை நிரப்பி, அதன் மூலம் கிணறுகளுக்கு தண்ணீர் விட்டு, வறண்டு இருக்கின்ற அந்தப் பாலைவனப் பகுதியை சோலைவனமாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதைச் சொன்னால்தான், அது புரியும் என்ற உணர்வோடுதான் சொன்னேன். இது முக்கியமான ஒரு திட்டம்.

ஆனால், அதே நேரத்தில் போராட்டம் என்ற விஷயத்தில் சிலருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டு, பல பேர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 6—3—1982 ஆம் தேதி காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8-28 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(8) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

117. சென்னை மாநகரைச் சேர்ந்த அடையாறு திட்டப் பிரிவு ஊரூர்ப் பகுதிக்குரிய விரிவான மேம்பாட்டுத் திட்டத்தையும் அதன் அனைத்து இணைப்புகளையும் பொது மக்கள் பார்வையிடுதல் குறித்து வீட்டு-வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 17—10—1980 ஆம் தேதியிடப் பெற்ற 1364 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர்-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS